SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

# AA3 பரீட்சை - ஜனவரி 2018

**(January 2018 Examination - AA3 Level)**

வினாக்களும் விதந்துரைக்கப்பட்ட விடைகளும்

பாட இலக்கம் **: AA34**

# செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு (PCA)


இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாஹிமி மாவத்தை,
நாரேஹேன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் ஒரு வெளியீடு**

# இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

## AA3 பரீட்சை – ஜனவரி 2018

## (AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பகுதி - A**

**நான்கு (04) கட்டாய வினாக்கள்**
**(மொத்தம் 20 புள்ளிகள்)**

### வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

புறச்சூழல் என்பது அரசியல், பொருளியல், சமூகம் மற்றும் கலாசாரம், தொழிநுட்பம், உயிரினங்கள் மற்றும் சட்டம் என்பவற்றை உள்ளடக்கியது.

- அரசியல் காரணிகள் - இக்காரணிகள் ஒரு நாட்டின் அரசாங்கம் ஒன்று எந்த அளவிற்கு வணிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை விபரிக்கின்றது.

a) இலங்கை அரசாங்க வரிக் கொள்கைகள்
b) வரிக் கொள்கைகள்
c) விலை ஒழுங்கு விதிகள்
d) வேலையின்மை
e) உலக பொருளாதார காரணிகள்

- பொருளாதார காரணிகள் - வணிகத்தை பாதிக்கும் பொருளாதார காரணிகளாவன பணவீக்கம், வட்டி வீதங்கள், வரி

a) வீதம்
b) வட்டி வீதம்
c) அரசாங்கத்தின் செலவீனம்
d) கேள்வி மற்றும் நிரம்பல்

- சமூக மற்றும் கலாசாரக் காரணிகள் : இவை நுகர்வோர்கள் இல்லப் பொறுப்பாளர்கள் மற்றும் சமூகங்கள் என்பவற்றின் விழுமியங்கள் நம்பிக்கைகள், நடத்தைகள் என்பவற்றை உள்ளடக்கியது.

a) நுகர்வோர் நடத்தைகள்
b) வாடிக்கையாளர்களின் வாழ்க்கைப்பாங்கு
c) கல்வி மட்டம்
d) நுகர்வோர் பிரிவுகளின் முன்னுரிமை – நகர்புற, பிறநகர்புற மற்றும் இளைஞர்

- தொழிநுட்பக் காரணிகள் : வணிகமானது உற்பத்தி செயன்முறையின் திடீர் மாற்றங்கள் பொருள் புத்துருவாக்கம் மற்றும் தொழிநுட்ப முன்னேற்றம் ஆகியவற்றால் பாதிக்கப்படகிறது.

a) இணையத்தள கொள்வனவு
b) பொருள் புத்துருவாக்க அளவு
c) தொழிநுட்ப முன்னேற்றம்
d) தன்னியக்க உற்பத்தி செயன்முறையின் அளவு

- சூழல் காரணிகள் : இது இயற்கைச் சூழல் மாற்றங்களினால் வணிகம் பாதிப்படைவதைக் குறிக்கிறது.

a) காலநிலை மாற்றம்

- சட்டக்காரணிகள் : இது நாட்டின் ஒழுங்கமைத்தல் சட்டக வேலையை உள்ளடக்குகிறது.

a) 2007 ஆண்டு 7ம் இலக்க கம்பனிகள் சட்டம்
b) கொள்வனவாளர்கள் பாதுகாப்பு மட்டம்
c) EPF மற்றும் ETF சம்பந்தப்பட்ட ஊழியர்கள் சட்டம்
d) கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்

**(05 புள்ளிகள்)**

## வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) 1. இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிரல்படுத்தப்பட்ட தொழில் கூறுகளின் நிதிக்கணக்குகளை மேற்பார்வை செய்தல், சமர்ப்பித்தல் மற்றும் போதுமான வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளல்.

2. நிதியியல் அறிக்கை தேவைப்பாடுகளுடன் தொழிற்கூரின் இணக்கப்பாட்டை மேற்பார்வை செய்தல்.

3. இலங்கை கணக்காய்வு நியமங்களின் தேவைப்பாடுகளை திருப்திப்படுத்தவதற்கு தொழிற்கூரின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம் என்பவற்றின் போதுமான தன்மையை உறுதிப்படுத்துவதற்கான செய்முறைகளை மேற்பார்வை செய்தல்.

4. தொழிற்கூற்றின் வெளியக கணக்காய்வாளர்களின் சுயாதீனம் மற்றும் ஆற்றுகை என்பவற்றினை மதிப்பீடு செய்தல்.

5. புறக்கணக்காய்வாளரின் நியமனம், மீள் நியமனம் மற்றும் விலக்குதல் தொடர்பாக சபைக்கு சிபாரிசு செய்தல் அத்துடன் புறக்கணக்காய்வாளர்களின் வேலை நிபந்தனை மற்றும் ஊதியம் என்பவற்றை அங்கீகரித்தல்.

(b) ஊதியக்குழு நிரற்படுத்தப்பட்ட அமைப்பின் நிரைவேற்று இயக்குனர்கள் மற்றும் முதன்மை நிரைவேற்று அதிகாரி ஆகியோருக்கு செலுத்துமதியான ஊதியத்தை ஊதியக்குழு சிபாரிசு செய்யும்.

**(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

## வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

i. கண்காணித்தல்

ii. பணிக்கமர்த்தல் நிறைவேற்றுகை

iii. மனித வளங்கள்

iv. வாடிக்கையாளர் உறவுகளின் ஏற்பும் நீடிப்பும்

v. பொருத்தப்பாடான ஒழுக்கநெறி தேவைப்பாடுகள்

vi. நிறுவனத்திற்குள் தரத்திற்கான தலைமைத்துவப் பொறுப்புகள்

**(05 புள்ளிகள்)**

## வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) வருடாந்த புறக்கணக்காய்வு

**(02 புள்ளிகள்)**

(b) வருடாந்த புறக்கணக்காய்வு நிதிக்கூற்றுக்களின் நியாயத்தன்மை மற்றும் உண்மைத்தன்மை என்பவற்றின் மீது நியாயமான உறுதிப்பாட்டை வழங்குகிறது. கணக்காய்வாளர் அறிக்கை நிதிக்கூற்றுக்கள் ஒரு நியாயமான மட்டத்திற்குள் உண்மையானதும் நியாயமானதுமாகும் எனக் கூறுமே தவிர அவைகள் சரியானவை என உத்தரவாதப்படுத்தாது.

**(03 புள்ளிகள்)**

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

**பிரிவு *A* இன் நிறைவு**

**பகுதி - B**

**மூன்று (03) கட்டாய வினாக்கள்.**
**(மொத்தம் 30 புள்ளிகள்)**

## வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(A)

(a) **போதுமான தன்மை சான்றுகளின் கனிய அளவுடன் தொடர்புபட்டதாகும்.**

தேவையான கணக்காய்வு சான்றின் கணிய அளவானது கணக்காய்வு செய்யப்படுகின்ற பரப்பில் உள்ள இடர் மட்டத்தினால் பாதிக்கப்படுவதாகும். கணக்காய்வாளர் அதிகம் சான்றுகளின் அளவு பெறுகிறாராயின், இடர் குறைவாகும்.

**பொருத்தமான தன்மை சான்றின் தரம் அல்லது நம்பகத்தன்மையுடன் தொடர்புபடுவதாகும்.**

இது பொருத்தமாயிருத்தல் மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றை உள்ளடக்குகிறது. கணக்காய்வு சான்றுகள் அதிகமக இருந்தால், கணக்காய்வு இடர் குறைவு.

**(04 புள்ளிகள்)**

(b) **வெளி மூல உறுதிப்பாடு**

கணக்காய்வு சான்று ஒரு மூன்றாம் தரப்பினர் நேரடியாக எழுத்துருவில் கணக்காய்வாளருக்கு பதிலிறுப்பதால் பெற்றுக்கொள்ளப்படும் சான்றாகும். இது சுயாதீனமான வெளி மூலத்திலிருந்து வருவதால் மிகவும் உயர்ந்த நம்பகத்தன்மையைக் கொண்டதாகும்.

உதாரணம் :
- வங்கி மீதி மற்றும் வங்கியாளர்களிடமிருந்து ஏனைய தகவல்கள்
- கடன் கொடுத்தவர்களிடமிருந்து கடன்.
- நடைமுறைக்கணக்கு மீதிகள், முதலீடுகள் மற்றும் கடன்கள் ஆகியவற்றிற்கான வங்கி உறுதிப்படுத்தல்கள்.
- மூன்றாம் தரப்பினர் வசம் உள்ள இருப்புருப்படிகளுக்கான உறுதிப்படுத்தல்கள்.
- சட்ட ஆலோசகர்களிடமிருந்து உறுதிப்படுத்தல்கள்.

**(02 புள்ளிகள்)**

(B) 01. கணிப்பீட்டாளரின் கணிப்பீடுகள் அல்லது முடிவுகளின் பொருத்தத்தன்மை மற்றும் போதுமானதன்மை மற்றும் கணக்காய்வு அதாரத்துடனான அவர்களுடைய நிலையானதன்மை.

02. கணிப்பீட்டாளரினால் உபயோகிக்கப்படுத்தப்பட்ட முறைகள் மற்றும் ஊகங்களின் பொருத்தத்தன்மை மற்றும் போதுமானதன்மை.

உதாரணம்: பயன்படுத்தப்பட்ட கழிவு வீதத்தின் பொருத்தத்தன்மை, எதிர்கால சம்பள அதிகரிப்பு, மற்றும் வணிக சூழல், வாடிக்கையாளரினால் விளங்கிக்கொள்ளலுடன் ஒப்பிடும் போது பணியாளர்களின் வருவாய் வீதம்.

03. நிபுணத்துவரின் வேலைக்கு முக்கியத்துவமான வளங்களில் இருந்து பெறப்பட்ட தகவல் பயன்படுத்தவாராயின் அவ்வளங்களின் மூலம் பெறப்பட்ட தகவல்கள் முழுமையானது மற்றும் துல்லியமானதாக இருக்க வேண்டும்.

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(A) (a) ஈடுபடுத்தற் கடிதம் என்பது கணக்காய்வாளர் மற்றும் வாடிக்கையாளருக்கு இடையில் தவறான புரிந்தணர்வைத் தவிர்ப்பதற்காக கணக்காய்வாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேலையினை எழுத்தருவில் உறுதிப்படுத்தி வழங்கும் கடிதம்.

**(03 புள்ளிகள்)**

(b)
- உரிமையாண்மையில் ஏற்பட்ட முக்கிய மாற்றம்
- சிரேஸ்ட முகாமைத்துவத்தில் ஏற்பட்ட அண்மைய மாற்றம்.
- கணக்காய்வின் நோக்கம் மற்றும் வீச்செல்லை தொடர்பாக தவறான விளக்கத்தினை முகாமைத்துவம் கொண்டிருப்பதாக ஏதேனும் அறிகுறிகள் இருந்தால்
- சட்டம் மற்றும் ஒழுங்கமைப்பில் ஏற்பட்ட மாற்றம்
- நிதியியல் அறிக்கையிடலுக்கான வேலை சட்டகத்தில் ஏற்பட்ட மாற்றம்
- நிறுவனத்தில் அளவு அல்லது இயல்பில் ஏற்பட்ட முக்கிய மாற்றம்

**(03 புள்ளிகள்)**

(B) 1. **சுயமீளாய்வு அச்சுறுத்தல்** - சுயமீளாய்வு அச்சுறுத்தலானது அங்கத்தவர் ஒருவர் தனது சொந்த வேலையை அல்லது உறுதிப்பாட்டு பணிக்கமர்தலின் ஒரு பகுதியாக ஆலோசனையை மீளாய்வு செய்யும் போது எழுகிறது.
ஒரு நிறுவனம் நிதியியல் முறைமைகளை வடிவமைத்த அமுல்படுத்திய பின்னர் அவற்றின் செயல்பாட்டின் விளைதிறன் மீது உறுதிப்பாட்டு அறிக்கை ஒன்றை வழங்குதல்.

2. **பரிச்சயமான அச்சுறுத்தல்** - இவ் அச்சுறுத்தல் தரப்பினருடன் அல்லது தொழில் கொள்வோருடன் ஒரு நீண்ட அல்லது நெருங்கிய உறவு காரணமாக ஒரு தொழில்சார் கணக்காளர் அவர்களின் நலன்களில் அதீத கருணையைக் கொண்டிருத்தல் அல்லது அவர்களின் வேலையில் அதீத ஏற்பினைக் கொண்டிருத்தல்.

3. **சுயநல அச்சுறுத்தல்** - நிதியியல் மற்றும் ஏனைய நலன்கள் என்பன பொறுத்தமற்ற வகையில் தொழில்சார் கணக்காளரின் தீர்மானத்தில் அல்லது நடத்தையில் செல்வாக்கு செலுத்துதல் தொடர்பான அச்சுறுத்தல். சுயநல அச்சுறுத்தலானது நிதியியல் அல்லது தனது குடும்ப அங்கத்தவரின் நலன்கள் நிமித்தமாக எழலாம்.

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 07 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) கணக்காய்வாளர் ஒருவர் நிறுவனத்தின் நியாயமானதும் உண்மையானதுமான செயற்பாடுகள் பற்றிய தகவல்களை பிழையின்றி அளவுசார் கூற்றுக்களில் வெளிப்படுத்தவேண்டும் அதேவேளை அவர் மாறாத/திருத்தப்படாத கருத்தினையும் கூற வேண்டும். **(03 புள்ளிகள்)**

(b) (i) பொருத்தமாக வெளிப்படுத்தப்பட்ட அல்லது நிதிக்கூற்றுக்களில் முன்னிலைப்படுத்தப்பட்ட ஒரு குறித்த விடயத்திற்கு கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களைப் பயன்படுத்துவோர், தமது கவனத்தை செலுத்த வேண்டும் என கணக்காய்வாளர் தீர்மானிக்கின்ற போது கணக்காய்வு அறிக்கையில் கணக்காளர் விடய அழுத்தம் சார்பாக பந்தியொன்றை உட்படுத்துவார். கணக்காய்வாளரின் தீர்ப்பின் படி குறித்த விடயம் நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துபவரின் விளக்கத்திற்கு அது அடிப்படையாக அமையும்.

**(03 புள்ளிகள்)**

(ii)
- i ஒரு விதிவிலக்கான வழக்காடல் அல்லது ஒழுங்குவிதி சட்ட நடவடிக்கைகள் தொடர்பான ஒரு நிச்சயமற்ற தன்மை நிலவுதல்.
- ii நிதிக் கூற்றுக்களின் மீது ஊடுருவல் தாக்கம் ஒன்றினை கொண்டுள்ள ஒரு புதிய கணக்கீட்டு நியமம் ஒன்றின் முந்திய பிரயோகம்.
- iii ஒரு பாரிய பேரழிவு உரிமத்தின் நிதிநிலைமையில் கணிசமான பாதிப்பை கொண்டுள்ளமை அல்லது தொடர்ந்து கொண்டிருத்தல்.

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**பிரிவு *B* இன் நிறைவு**

aat SRI LANKA

**பகுதி - C**

**இரண்டு (02) கட்டாய வினாக்கள்.**
**(மொத்தம் 50 புள்ளிகள்)**

## வினா 08 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(A)

| (a) உள்ளக கட்டுப்பாடு பலவீனங்கள | (b) பரிந்துரைகள் |
|---|---|
| 1. பழுந்தடைந்த பொருட்களை அடையாளம் கண்டுகொள்ள சரியான வழிமுறை இல்லாமை | - விநியோகித்தர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் பொருட்களில் ஏதேனும் பழுதுகள் இருப்பின் அதனை அடையாளம் காண கவனமாக ஆராய வேண்டும். அதற்கு பொறுப்பானவர் பழுதடைந்த பொருட்களை உறுதிப்படுத்த GRN சான்றிதழை அனுமதிக்க வேண்டும்.<br><br>- ஏதேனும் பழுதடைந்த பொருட்கள் அடையாளம் படுத்தப்படின் அது உடனடியாக விநியோகிஸ்தருக்கு திருப்பி அனுப்பப்பட வேண்டும். அத்துடன் இவை சம்பந்தமாக உடனடியாக நிதிப்பிரிவிற்கு அறிவிக்கப்பட்டு அப்பொருட்களுக்கான தொகையினை விநியோகிஸ்தர்களுக்கு செலுத்துவதை தடுக்க வேண்டும்.<br><br>- கணக்காளர் விநியோகிஸ்தர்களிடமிருந்து பழுதாக்கப்பட்ட பொருட்களுக்கான சரிபார்க்கப்பட்ட விலைப்பட்டியலை பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன் செலவுப்பக்கத்தில் பழுதாக்கப்பட்ட இருப்பு பெறுமதியை பதிய வேண்டும். |
| 2. களஞ்சிய அலுவலர் GRN இனை எழுதுதல். ஆனால் GRN இனை அங்கீகாரம் அளிக்க பொறுப்பான ஒருவர் இல்லை. | கோரப்பட்ட மற்றும் விநியோகிஸ்தர் விலைப்பட்டியலுக்கு அமைவாக சரியான எண்ணிக்கையான பொருட்களை பெற்றுக்கொண்டதாக உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் GRNஇனை அப்பொறுப்புள்ள நபர் அதிகாரமளிக்க வேண்டும். |
| 3. கடமைகளைப் பகிர்ந்தளிப்பதில் குறைபாடு இருத்தல். அதாவது விலைப்பட்டியலை எழுதுபவரே பணத்தையும் வசூலித்தல். | கடமைகளை சரியாக பகிர்தளிப்பதை அமுல்படுத்ததல் |
| 4. விலைப்பட்டியலை அறிமுகப்படுத்துவதற்குரிய சரியான செயல்முறை இல்லை. | விலைபட்டியலை அனுமதிக்க பொறுப்புள்ள நபரை வேலைக்கு அமர்த்தலாம். |

| | |
|---|---|
| 5. அனுப்புதல் குறிப்பின் அடிப்படையில் ஊழியர் வாடிக்கையாளருக்கு பொருட்களை அனுப்புவார். இதனை எவரும் அவதானித்து உறுதிப்படுத்துவதில்லை. | ஆகவே பொறுப்பான நபர் விலைப்பட்டியலுக்கு அமைவாக சரியான எண்ணிக்கையான பொருட்கள் அனுப்பப்படுவதை உறுதி செய்ய வேண்டும். |
| 6. இருப்பு பற்றாக்குறைக்கு ஏற்றவகையில் சரியான பாதுகாப்பான செயற்பாடுகளை எடுக்காது இருத்தல். | இருப்பு பற்றாக்குறையை அடையாளம் காணும்போது உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். பற்றாக்குறைக்கான காரணத்தை அதற்கு பொறுப்பானவரிடமிருந்து விசாரித்தறிய வேண்டும். |
| 7. கம்பனிக்கான தொடர்ச்சியான இருப்பு கணிப்பீட்டை நடைமுறைப்படுத்தாது இருத்தல். | இருப்ப பற்றாக்குறையை அடையாளம் காணுவதற்கு வழக்கமாக இருப்பை கணிப்பிட வேண்டும். பற்றாக்குறையை அடையாளப்படுத்தப்படின் அது சரிசெய்யப்பட வேண்டும். |
| 8. களஞ்சியசாலைக்கு வாடிக்கையாளரின் கைமூலமான விலைப்பட்டியல் வழங்கப்படல் | விலைப்பட்டியலின் நகல் ஆனது களஞ்சிய அலுவலரை கட்டாயம் வாடிக்கையாளருடன் அல்லாமல் சென்றடைய வேண்டும். |
| 9. வசூலிக்கப்பட்ட பணத்திலிருந்து மற்றைய கொடுப்பனவுகளை செலுத்துதல். | செலவுக்காக சிறுகட்டு நிதியைப் பயன்படுத்தல். வசூலிக்கப்பட்ட பணம் வங்கிக்கணக்கில் உடனடியாக வைப்பில்இட வேண்டும். |

**(10 புள்ளிகள்)**

(c) (i) கணணி பிரயோகத்தின் அபிவிருத்தி

(ii) நிகழ்ச்சிநிரலில் அங்கீகாரமற்ற மாற்றங்களைத் தவிர்த்தல் அல்லது கண்டுபிடித்தல்.

(iii) சோதனையிடல் மற்றும் நிகழ்ச்சி நிரல் மாற்றங்களை ஆவணப்படுத்தல்.

(iv) தரவு கோவைகளில் அங்கீகாரமற்ற திருத்தங்களை தடுத்தலுக்கான கட்டுப்பாடுகள்

(v) செயற்பாட்டின் தெரடர்ந்தியங்கும் தன்மையை உறுதிப்படுத்தலுக்கான கட்டுப்பாடுகள்

**(03 புள்ளிகள்)**

(d) **கணணி பிரயோகத்தின் அபிவிருத்தி**

(i) 1 கணணிப்பயன்பாட்டாளர்களாலும் முகாமையினராலும் அங்கீகாரம்.

2 கடமைகளைப் பாகுபடுத்தல்.

3 முறைமை வடிவமைப்பின் மீதான நியமங்கள், நிகழ்ச்சிப்படுத்தல், மற்றும் ஆவணப்படுத்தல்.

4 புதிய நடைமுறைகளில் ஊழியர்களை பயிற்றுவித்தல் மற்றும் போதுமான ஆவணப்படுத்தலில் கிடைப்புத்தன்மை.

**நிகழ்ச்சிநிரலில் அங்கீகாரமற்ற மாற்றங்களைத் தவிர்த்தல் அல்லது கண்டுபிடித்தல்.**

(ii) 1 கடவுச் சொல் பாதுகாப்பு

2 எடுக்கப்படுகின்ற நிரல்களின் காப்பு பிரதிகள் மற்றும் அவற்றை வேறு இடங்களில் களஞ்சியப்படுத்தல்.

3 கடமைகளைப் பாகுபடுத்தல்.

4 பூட்டப்பட்ட கதவுகள் மற்றும் விசைப்பலகைகள் மூலம் அணுகுவதில் மத்திய கணணிக்கு இயக்கத்தை ஏற்படுத்தல்.

**சோதனையிடல் மற்றும் நிகழ்ச்சி நிரல் மாற்றங்களை ஆவணப்படுத்தல்.**

(iii) 1 சோதனை நடைமுறைகளை பூரணப்படுத்தல்.

2 ஆவணப்படுத்தல் நியமங்கள்.

3 கணணிப் பயன்பாட்டாளர்கள் மற்றும் முகாமையினால் ஏற்படும் மாற்றங்களை அங்கீகரித்தல்.

4 கணணி நிகழ்ச்சி நிரல்களைப் பயன்படுத்தும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சியளித்தல்.

**தரவு கோவைகளில் அங்கீகாரமற்ற திருத்தங்களை தடுத்தலுக்கான கட்டுப்பாடுகள்**

(iv) 1 தொலை முனையங்களின் மீது பௌதீக பாதுகாப்பு

2 தடுப்புச்சுவர்கள்

3 அங்கீகரிக்கப்பட்ட ஆளணியர்களுக்கு மட்டும் தகவல்களை அணுகுவதற்கான அதிகாரத்தை வரையறைப்படுத்தல்.

4 பயன்பாட்டாளர்களை இனங்காணும் கட்டுப்பாடுகள் - கடவுச்சொல் போன்றன.

தொடர்ச்சியான செயற்பாட்டை உறுதிப்படுத்தும் கட்டுப்பாடுகள்

(v) 1. இடர் மீட்பு நடைமுறைகள்

2. தீ மற்றும் ஏனைய ஆபத்துக்களில் இருந்து உபகரணங்களுக்கான பாதுகாப்பு

3. நிகழ்ச்சி திட்டங்கள் , தகவல்கள் என்பவற்றில் மேலதிக பிரதிகளை களஞ்சியப்படுத்தல்

4. மீட்டெடுத்தலுக்கான வளங்கள்.

**(06 புள்ளிகள்)**

(B)

| உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலின் கூறுகள் | குறிப்பிட்ட நிகழ்வுக்கான பிரயோக விளக்கம் |
|---|---|
| மூன்று தரப்பினர்களின் உறவு | மூன்று பிரிவினர்<br>தகவல்களின் குறித்த பயன்பாட்டாளர்கள்<br>பயிற்சியாளர்<br>தகவல் வழங்கும் நபர் |
| அடிப்படை விடயம் | இது சான்றுப்படுத்தப்படவேண்டிய தரவு ஆகும். இது பொறுப்பான தரப்பினரால் தயாரிக்கப்பட்டதாகும். இது பல்வேறு வடிவங்களில் கொண்டிருக்கும். |
| பொருத்தமான பிரமாணங்கள் | ஒரு அபிப்பிராயத்தை அடைவதற்கு அடிப்படை விடயம் பிரமாணங்களுக்கு எதிராக மதிப்பீடு அல்லது அளவீடு செய்யப்படுகிறது. இப்பிரமாணங்கள் அடிப்படை விடயத்தின் தன்மையில் தங்கியுள்ளது. |
| சான்று | தேவையான உறுதிப்பாட்டு மட்டத்தை ஆதரிக்க போதுமான பொருத்தப்பாடுடைய சான்றுகள் திரட்டப்படல் வேண்டும். |
| உறுதிப்பாட்டு அறிக்கை / முடிவுரை | பயிற்சியாளர் தனது முடிவினை அல்லது அபிப்பிராயத்தை ஒரு உறுதிப்பாட்டு அறிக்கையில் குறித்த பயன்பாட்டாளருக்காக சமர்ப்பிக்கின்றார். |

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

## வினா 09 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a)

| விளங்கிக்கொள்ளல் | உதாரணம் |
|---|---|
| நிறுவனத்தின் இயல்பு | ■ டியாரா கம்பனி உரிமையாளர் யார்.<br>■ அது நிதி முறை<br>■ டியாரா கம்பனியின் நிறுவனக் கட்டமைப்பு, களஞ்சியம் உள்ளடக்கலாக.<br>■ டியாரா கம்பனியின் தற்போதைய நிலைமை<br>■ தற்போதைய நிதியியல் அறிக்கை தயாரித்தல். |

| | |
|---|---|
| தொழில்துறை, ஒழுங்குமுறை மற்றும் பிற வெளிப்புற காரணிகள் | ■ ஒழுங்குமுறைக் கட்டமைப்பு- கம்பனிச்சட்டம், இறக்குமதிக் கட்டுப்பாடு, விலையிடல் கட்டமைப்பு.<br>■ அரசாங்க கொள்கை மற்றும் வரியியல் கட்டமைப்பு<br>■ டியாரா கம்பனியில் உள்ள இறுதி முடிவு ஆடைகளுக்கான சுழற்சி / பருவகால செயற்பாடுகள்<br>■ இலங்கை இத் தொழில்துறையில் சந்தை / போட்டியாளர்கள் உள்ளனர். |
| அகக்கட்டுப்பாடுகள் | ■ கட்டுப்பாடு செயற்பாடுகள்<br>■ கண்காணிப்பு கட்டுப்பாடுகள்<br>■ கட்டுப்பாட்டுச் சூழல்<br>■ இடர் மதிப்பீடு<br>■ தகவல் முறைமை |
| நோக்கங்கள் மற்றும் உத்திகள் மற்றும் நிதி செயல்திறன் உள்ளடங்களான வணிக இடர்கள். | ■ டியாரா கம்பனியின் குறுங்கால மற்றும் நீண்டகால நோக்கங்கள்<br>■ புதிய முதலீட்டுக்கான திட்டங்கள்,<br>■ வியாபார கட்டமைப்பு மாற்றத்திற்கான திட்டங்கள்.<br>■ டியாரா கம்பனி நிதி செயல்திறன் மற்றும் எப்படி பணியாளர்களின் ஊதியத்துடன் தொடர்புடையது. |
| கணக்கு கொள்கைகளின் தேர்வு மற்றும் பயன்பாடு | கணக்கு கொள்கைகள் டியாரா கம்பனி மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நிதியறிக்கை இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு ஏற்ப தயாரித்து மற்றும் முன்வைக்கப்படுகிறது. |

SRI LANKA

**(06 புள்ளிகள்)**

(b) (i) டியாரா கம்பனி ஆனது நடத்தைப்பாங்கு தொழில்துறையிலுள்ளது, இடரில் உள்ளது, சரக்கு ஆனது குறைவான NRV இனைக் கொண்டுள்ளது. NRV வீழ்ந்ததற்கு வாடிக்கையாளர் தொழில்துறை நடத்தைப்பாங்கு ஆனது விரைவாக மாறியமை.

**(03 புள்ளிகள்)**

(ii)
1. சரக்கு கணக்கெடுப்பின் போது மெதுவான நகரும் சரக்கினை ஆராய்தல்.
2. மெதுவாக நகரும் சரக்குகளுக்கு வருடாந்த இறுதி சரக்கு ஆய்வு பகுப்பாய்விற்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
3. ஆண்டின் பின் இறுதியில் மெக்ஸி ஆடை விற்பனையால் நிதியறிக்கையில் உயர்ந்த NRV பதிவாகியுள்ளது.

**(04 புள்ளிகள்)**

(iii) 1. கிரயத்தின் துல்லியத்தை விநியோகிஸ்தரின் விலைப்பட்டியலிற்கு பொருந்தும் வகையில் பரிசீலித்தல்.

2. இருப்பிலுள்ள பொருட்களின் பெறுமதியை மீள்கணிப்பிடுதல்.

**(02 புள்ளிகள்)**

(c) (i) விசாரணையானது நிறுவனத்திற்கு உள்ளே அல்லது நிறுவனத்திற்கு வெளியே நிதியியல் மற்றும் நிதியியல் அற்ற அறிவுபூர்வமான நபரை தேடுவதற்கான தகவலைக் கொண்டிருப்பதாகும். ஆதாரத்தின் பலமானது அறிவு மற்றும் நேர்மையில் தங்கியுள்ளது.

உதாரணம் : முறையாக எழுதப்பட்ட கேள்விகள் மற்றும் முறையற்ற ரீதியில் எழுதப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்தல்.

அவதானமானது மற்றையவரால் செயல்படுத்தப்படும் செயல்முறைகளைக் கவனிப்பதாகும். இது வரையறுக்கப்பட்ட பயனுடையது. கணக்காய்வாளர் பார்வையிடும் போது இடம்பெறும் செயல்முறையை மட்டும் குறிக்கிறது.

உதாரணம் : பௌதீக இருப்பு கணக்கீட்டை அவதானித்தல்.

(ii) மீள் கணக்கீடு என்பது கணக்கீட்டு அறிக்கைகள் மற்றும் மூல ஆவணங்களின் எண்கணித ரீதியான துல்லியத்தை சரிபார்த்தலாகும்.

உதாரணம் : வட்டி செலுத்தப்பட்ட தொகையைக் கணிப்பிடுதல். வட்டி வருமானம், தேய்மானம்.

**(06 புள்ளிகள்)**

(d)

(1) கணித துல்லியத்தை சரிபார்த்தல்.

(2) கடன் கொடுத்தேரர் பேரேடு மீதித்தொகை தனிப்பட்ட ரீதியில் கடன்கொடுத்தொர் மீதித்தொகையை ஏற்றுக்கொள்ளல்.

(3) விநியோகிஸ்தருக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவை சரிபார்த்தல்.

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**பிரிவு *C* இன் நிறைவு**

***Notice :***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers".
The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designed especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2017 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*
*All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*